UNIVERSITÄTS-
KINDERSPITAL
ZÜRICH

தகவல்
நோயாளர் நிர்வாகம்

# விபத்தின் பின்னர் செலவைப் பொறுப்பேற்பது

உங்கள் பிள்ளை அல்லது அவர்கள் இளையோராக இருந்தால் அவர்கள் ஒரு விபத்தின் பின்னர் சூரிச் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவர். இதற்கான கட்டணத்தை சரியான காப்புறுதி நிறுவனத்துக்கு அனுப்பி வைப்பதற்காக, தயவுசெய்து பின்பக்கத்தில் உள்ளவற்றைக் கவனத்தில் கொள்ளுங்கள்.

Das Spital der
Eleonorenstiftung

## பெற்றோருக்கு: உங்கள் பிள்ளை விபத்துக்குள்ளானால்

பெற்றோரான நீங்கள் உங்கள் பிள்ளை க்கு யாரிடம் விபத்துக்காகக் காப்புறுதி செய்துள்ளீர்களோ, அவர்களிடம் விபத் துக் குறித்து அறிவியுங்கள். அதன்பின் விபத்து– அல்லது பாதிப்புக் குறித்து சரியான விளக்கத்துடன் நிரப்பி அனுப்பு வதற்கான படிவத்தை நீங்கள் பெற்றுக் கொள்வீர்கள். இந்தப் படிவத்தை <u>10 நாட்களுக்குள்</u> அதில்குறிப்பிடப்பட்டுள்ள அலுவலகத்திற்குத் திருப்பி அனுப்பி வையுங்கள். விபத்துக் குறித்து அறிவித் தது மற்றும் வழமையானநடைமுறைகள் தெளிவுபடுத்தப்பட்ட பின்னர், உங்கள் பிள்ளையின் சிகிச்சைக்கான செலவு குறித்து காப்புறுதித் திணைக்களத்துக்கு அறிவிக்கப்படும்.

## இளையோருக்கு: தொழிற்கல்வி நாட்களில் விபத்துக்குள்ளானால்

விபத்துக் குறித்து உங்கள் தொழிலக ம்ஃ தொழில் வழங்குனருக்கு நீங்கள் அறி வியுங்கள். உங்கள் தொழிலகம்ஃதொழி ல் வழங்குனரிடமிருந்து விபத்து– அல்லது பாதிப்புக் குறித்து அறிவிப்பத ற்கான ஒரு படிவத்தை நீங்கள் பெற்று க்கொள்வீர்கள், இதை நீங்கள் சரிவரநி ரப்ப வேண்டும். இந்தப் படிவத்தை <u>10 நாட்களுக்குள்</u> அதில்குறிப்பிடப்பட்டுள்ள அலுவலகத்திற்குத் திருப்பி அனுப்பி வையுங்கள். விபத்துக் குறித்து அறிவித் தது மற்றும் வழமையானநடைமுறைகள் தெளிவுபடுத்தப்பட்ட பின்னர், உங்கள் சிகிச்சைக்கான செலவு குறித்து அதற்குப் பொறுப்பான காப்புறுதித் திணைக்களத்துக்கு அறிவிக்கப்படும்

---

விபத்துக் குறித்து அறிவிக்காது விட்டால், சிகிச்சைக்கான செலவை நீங்களே பொறுப்பேற்பதற்குக் கடமைப்பட்டுள்ளீர்கள்.

---

விபத்து– அல்லது பாதிப்புகளை அறிவிப்பது குறித்துக் கேள்விகள் இருப்பின் தயவுசெய்து நேரடியாக உங்களுக்குப் பொறுப்பான காப்புறுதி நிலையத்தைத் தொடர்பு கொள்ளுங்கள்.

எம்முடன் இணைந்து செயலாற்றுவதற்கு மிகவும் நன்றி.

---

UNIVERSITÄTS-
**KINDERSPITAL ZÜRICH**

*Das Spital der Eleonorenstiftung*

Kinderspital Zürich - Eleonorenstiftung
Steinwiesstrasse 75
8032 Zürich

www.kispi.uzh.ch
Telefon +41 44 266 71 11